DINAMALAR

14 JULY 2023

PAGE 3

# பிஎச்.டி.,க்கு விண்ணப்பிக்க கால அவகாசம் நீட்டிப்பு

**புதுச்சேரி, ஜூலை 14–**

புதுச்சேரி பல்கலையில் பிஎச்.டி., சேர்க்கைக்கு விண்ணப்பிக்க வரும் 17ம் தேதி வரை காலக்கெடு நீட்டிக்கப்பட்டுள்ளது.

புதுச்சேரி பல்கலை மற்றும் இணைப்பு கல்லூரிகளில் மொத்தம் 750 பிஎச்.டி., படிப்புகள் உள்ளன. இதற்கான சேர்க்கை நுழைவு தேர்வு அடிப்படையில் நடக்க உள்ளது. இதற்கான விண்ணப்பம் கடந்த 10ம் தேதி வரை ஆன்–லைனில் பெறப்பட்டது.

இந்நிலையில் இதுவரை விண்ணப்பிக்காத மாணவர்களுக்கு வாய்ப்பளிக்கும் வரையில் விண்ணப்பிப்பதற்கான காலக்கெடு வரும் 17ம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

இந்த கல்வியாண்டில் ஹிந்தி, சுற்றுலா, ஆங்கிலம் உள்ளிட்ட பிரிவுகளில் புதிதாக பிஎச்.டி., படிப்புகள் துவங்கப்பட்டுள்ளன. விண்ணப்பக் கட்டணம் பொது பிரிவினருக்கு ரூ.1,000; எஸ்.சி., எஸ்.டி., பிரிவினர் ரூ.500 செலுத்த வேண்டும்.

மாற்றுத்திறனாளிகள், மூன்றாம் பாலினத்தவர்களுக்கு கட்டணம் இல்லை. மேலும், விபரங்களுக்கு ஹெல்ப் டெஸ்க் admissions.pu@pondiuni.ac.in அல்லது 04132654876 எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

அல்லது, https://www.pondiuni.edu.in/admissions-2023-24/ என்ற இணையதள முகவரியில் பார்க்கலாம்.

DINAMALAR

14 JULY 2023

PAGE 3

# சமுதாய கல்லூரியில் வளாக நேர்காணல்



லாஸ்பேட்டை சமுதாய கல்லூரியில் நடந்த வளாக நேர்காணலில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு பணி ஆணையை மெட்பிட் ரத்தப் பரிசோதனை நிலைய நிறுவனர்கள், கல்லூரி முதல்வர் லலிதா ராமகிருஷ்ணன் முன்னிலையில் வழங்கினர்.

**புதுச்சேரி, ஜூலை 14–**

லாஸ்பேட்டை சமுதாய கல்லூரியில் நடந்த வளாக நேர்காணலில் 10 பேருக்கு பணியாணை வழங்கப் பட்டது.

புதுச்சேரி பல்கலையின் சமுதாய கல்லூரி லாஸ் பேட்டையில் இயங்கி வருகிறது. இங்கு, இறுதி யாண்டு மாணவர்களுக் கான வளாக நேர்காணல் நடந்தது.

புதுச்சேரி மெட்பிட் ரத்த பரிசோதனை நிலைய குழும நிறுவனர்கள் பேரா சிரியர்கள் அருண் நாக லிங்கம், அருண் குமார் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரி குமரேசன் ஆகி யோர் நேர்காணலில் பங் கேற்று உயிரி வேதியியல் துறை, ஊடு கதிரியியல் துறை மற்றும் மருத்துவ ஆய்வகத் தொழில்நுட்பவி யல்துறை மாணவர்களுக்கு நேர்காணல் நடத்தினர். இதில், 50க்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர் பங்கேற்றனர்.

அவர்களில் தேர்வு செய் யப்பட்ட 10 பேருக்கு பணி ஆணை கல்லூரி முதல்வர் லலிதா ராமகி ருஷ்ணன் முன்னிலையில் வழங்கப்பட்டது.

MALAI MALAR

DATE : 14·07·2023

PAGE NO: 02

# பி.எச்டி. படிப்புக்கு காலக்கெடு நீட்டிப்பு

புதுச்சேரி, ஜூலை.14--

புதுவை பல்கலைக்கழகம் மற்றும் இணைப்பு கல்லூரிகளில் மொத்தம் 750 பி.எச்டி. படிப்புகள் உள்ளது.

இதற்கான சேர்க்கை நுழைவுத்தேர்வு அடிப்படையில் நடக்க உள்ளது. இதற்கான விண்ணப்பம் கடந்த 10–ந் தேதி வரை ஆன்லைனில் பெறப்பட்டது.

இந்நிலையில் இதுவரை விண்ணப்பிக்காதவர்களுக்கு வாய்ப்பளிக்கும் வகையில் விண்ணப்பிக்கும் காலக்கெடு வருகிற 17–ந் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. இந்த கல்வியாண்டில் இந்தி, சுற்றுலா, ஆங்கிலம் உட்பட பல பிரிவுகளில் பிஎச்டி படிப்புகள் தொடங்கப்பட்டுள்ளது.

விண்ணப்ப கட்டணம் பொது ரூ.ஆயிரம், எஸ்.சி, எஸ்.டி. பிரிவினர் ரூ.500 செலுத்த வேண்டும். மாற்றுத்திறனாளிகள், 3–ம் பாலினத்தவர்களுக்கு கட்டணம் இல்லை.

மேலும் விபரங்களுக்கு பல்கலைக்கழக இணையதளம் அல்லது 0413 2654876 என்ற எண்ணை தொடர்பு கொள்ளலாம் என பல்கலைக்கழக நிர்வாகம் தெரிவித்துள்ளது.

DAILY THANTHI

PAGE NO: 09 DATE: 14.07.2023

### புதுவை பல்கலைக்கழகத்தில்

# பி.எச்டி படிப்புக்கு விண்ணப்பிக்க காலக்கெடு நீட்டிப்பு

புதுச்சேரி, ஜூலை.14-

புதுச்சேரி பல்லைக்கழக மக்கள் தொடர்பு உதவிப் பதிவாளர் மகேஷ் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:-

புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் பி.எச்டி சேர்க்கை நுழைவுத்தேர்வு மூலம் நடந்து வருகிறது. அதன்படி 2023-24-ம் ஆண்டுக்கான மாண வர் சேர்க்கைக்காக விண்ணப்பங்கள் https://www.pondiuni.edu.in/admissions-2023-24/ என்ற இணையதளம் மூலம் பெறப்பட்டு வருகின்றன. இதற்கு 12-ந் தேதி கடைசி என்று அறிவிக்கப்பட்டு இருந்தது. தற்போது மாணவர்களின் கோரிக்கையை ஏற்று விண்ணப்பிக்கும் காலக்கெடு வருகிற 17-ந் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. புதிதாக விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்பதாரர்கள் இந்த வாய்ப்பை பயன்படுத்திக்கொள்ளலாம்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

DINAKARAN

PAGE NO: 16

DATE: 14.07.2023

புதுச்சேரி பல்கலைக்கழகத்தில்

# பிஎச்டி படிப்புக்கு ஆன்லைனில் விண்ணப்பிக்கும் தேதி நீட்டிப்பு

புதுச்சேரி, ஜூலை 14: புதுச்சேரி பல்கலைக்கழக உதவி பதிவாளர் (மக்கள் தொடர்பு பிரிவு) மகேஷ் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் நுழைவு தேர்வு மூலம் நிரப்பப்பட வுள்ள பிஎச்டி படிப்புக்கான மாண வர் சேர்க்கைக்கு ஆன்லைன் விண் ணப்பிக்கும் நாள் வரும் 17ம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. முன்ன தாக பதிவு செய்து முடிக்க முடியாத அனைத்து விண்ணப்பதாரர்களுக் கும், புதிதாக விண்ணப்பிக்க விரும் பும் விண்ணப்பதாரர்களுக்கும் இந்த வாய்ப்பு வழங்கப்படுகிறது. பிஎச்டி படிக்க விரும்பும் மாணவர்கள் 2023-24 கல்வியாண்டுக்கான சேர்க்கை, தகுதியின்படி, *https://www.pondiuni.edu.in/admissions-2023-24/.* என்ற புதுவை பல்கலைக்கழக இணையத ளத்தில் விண்ணப்பிக்கலாம்.

2023-24 கல்வியாண்டில் பிஎச்டி இந்தி, சுற்றுலா படிப்புகள் மற்றும் ஆங்கிலம் ஆகிய பாடப்பிரிவுகள் இப்போது சேர்க்கப்பட்டுள்ளன. மேலும், பிற பிஎச்டிக்கான பாடப்பி ரிவுகளும் பல்கலைக்கழக இணைய தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட் டுள்ளன.

விண்ணப்பதாரர்கள் விண்ணப் பிக்கும் முன், பாடப்பிரிவுக்கான தகுதி, தேவைகளை சரிபார்க்க அறிவுறுத்தப்படுகிறார்கள். பிஎச்டி பற்றிய விவரங்கள், பல்கலைக்கழக பள்ளிகள், துறைகள், மையங்கள் மற்றும் அதனுடன் இணைந்த நிறுவனங்களில் வழங்கப்படும் படிப்புகள் உள்ளிட்ட தகவல்கள் பல்கலைக்கழக இணையதளத்தில் உள்ளது. சமீபத்திய தகவல்களை விண்ணப்பதாரர்கள் பல்கலைக்க ழக இணையதளத்தை தவறாமல் பார்வையிட அறிவுறுத்தப்படுகிறார் கள். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.